Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 26 இதழ் - 10 அக்டோபர் 2013


தனிப்பிரதி
ரூ.9/-



எல்லாக் காவலோடும் உன்
இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று
ஜீவ ஊற்று புறப்படும் (நீதிமொழிகள் 4 : 23)


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.

















## ஆசானின் அறிவுரையிலே ...

1. ஆசிரியர் உரை 1

2. ஏன் நாங்கள் நியாய... 8

3. பெண்கள் பகுதி 13

4. வாலிபர் பகுதி 16

5. சிறுவர் பகுதி 19

6. நிழலும் நிஜமும் 21

7. வசன ரீதியான... 26

8. மந்தையைக் ... 30

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu, India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 OCTOBER 2013 Issue - 10


ஆசிரியர் உரை

## " இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை "

நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து " மாபெரும் போதகர் " என்ற சிறப்புப் பெயரை சர்ச்சைக்கிடமின்றி சான்றோரால் பெற்றவர். அவருடைய பேச்சில் எளிமையும், வலிமையும் மாத்திரமல்லாமல் கனிவும், கருத்தாழமும், சொல்லாட்சியும் மிகுந்து காணப்பட்டது. இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும், புரிந்து கொள்வதற்குச் சிரமம் என்றும் சொல்லப்படும் பகுதிகள் எதுவுமில்லையென்று வேதத்தை ஆழ்ந்து படிக்கும் ஒருவனால் ஆணித் தரமாகச் சொல்ல முடியும். ஆனால், அவர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் மாத்திரம் வேதத்தை மேலெழுந்தவாரியாகப் படிக்கும் அநேகரின் புருவத்தை உயர்த்தி விடுகிறது. அதற்குக் காரணம் நிச்சயமாக நமதாண்டவரல்ல. இருப்பினும், அவர் தனது தீர்ப்பில் தவறிழைத்து விட்டது போன்ற ஒரு மாயத் தோற்றம் கண்ணுக்கு தெரியும் என்பதை பெரும்பாலும் நாம் மறுப்பதற்கில்லை.

இச்சம்பவம், இயேசுவின் பூமிக்குண்டான வாழ்வின் கடைசி ஆறு நாட்களில் நடந்த ஒன்று. பஸ்கா பண்டிகை சமீபத்திருந்த சந்தர்ப்பம் அது. அவரின் பூலோக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். ஜீவனுக்குண்டான வழியைப் போதிக்கும்படி பூமிக்கு வந்த இயேசு தனது கடைசி கட்ட போதனையில் தீவிரம் காட்டியிருந்த நேரம். " எரிகோவிலிருந்து எருசலேமுக்கு வரும் வழியில், எருசலேம் பட்டணத்துக்கு வெளியே இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒலிவமலையின் அடிவாரத்திலுள்ள பெத்பகே பெத்தானியா கிராமத்திற்கு வந்து

சேர்ந்தார். அப்பொழுது வழக்கம் போல் மார்த்தாள், மரியாள், லாசரு இவர்களுக்குச் சொந்தமான வீட்டில் தங்கினார். மரியாள் விலையேறப்பட்ட களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் " (யோவான் 12:2).

அத்தருணத்தின் அடுத்த நாளில் இயேசு ஒருவரும், ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியின் மீதேறி வெற்றி வீரராக எருசலேமுக்குப் பவனி வந்தார். அப்போது, தங்களின் பரவசத்தை வெளிப்படுத்த விரும்பிய பெருங்கூட்டம் வஸ்திரங்களை வழியிலே விரித்தது. அத்தோடு திருப்தியடையாமல் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பவும் செய்தது. "ஓசன்னா" என்ற முழக்கம் விண்ணை முட்டியது. வெகு ஜன அங்கீகாரம் வெகுவாய் கிடைத்தது. திரளான ஜனங்கள் முன்னும், பின்னும் வர நகர வீதியில் வலம் வந்தார். எருசலேமில் இருந்த பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் அசுர செல்வாக்கால் இதைத் தடுக்க முடியவில்லை. இயேசுவுக்கு எருசலேமில் இவ்வளவ பெரும் கூட்டம் கூடினதில்லை. ஆகவே, இயேசு எருசலேம் தேவாலயத்துக்குள் பிரவேசித்து எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்த போது கூட, அவருடைய எதிர்ப்பாளர்களால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை (மாற்கு 11:1,11).

சரி, அன்று இராத்தங்க பெத்தானியாவுக்கு வந்து, மீண்டும் எருசலேமுக்குப் போகும் போதுதான் நமது தலைப்புக்குண்டான சம்பவம் நடந்துள்ளது. "மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது, *இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலே கண்டு அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திபழக் காலமாயிராதபடியால். அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து; இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்* " (மாற்கு 11:12,14).

இந்தப் பகுதியைப் படித்துப் புரிந்து கொள்ளமுடியாமல் வாலிபன் ஒருவன் என்னிடத்தில் வந்தான். அத்திப்பழக்காலமல்லாத ஒரு சமயத்தில் கனியைத் தேடுவதே தவறு. ஆனால், தேடினது போதாதென்று அதை சபிக்கவும் செய்திருக்கிறாரே இயேசு. இது எப்படி நியாயமாகும்? என்று கேள்வி எழுப்பி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான். அவனால் இதன் பின்னனியை அறிந்து அதன் சாரத்தைப் புறிந்து கொள்ளவும் முடியவில்லை. இயேசுவைக் குறை சொல்லவும் மனமில்லை. அந்த வாலிபனுடைய சிந்தையில் அப்பொழுது பெரும் தடுமாற்றம். ஒருவேளை இப்பகுதியை கவனமாகப் படிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சிந்தை வரவே செய்யும். அருமையானவர்களே! எப்பொழுதும் ஒன்றை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். இயேசு ஆண்டவர் ஒருபோதும் தனது பூமியின் வாழ்க்கையில் தவறு செய்ததில்லை. தேவனுடைய வார்த்தை கூறுவதைக் கவனியுங்கள். " *அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை* " (1 பேதுரு 2:22). ஆகவே, இப்படிப்பட்ட சமயங்களில்,

நம்முடைய புரிந்து கொள்ளுதலில் உள்ள கோளாறைக் களைந்தெறிய முயற்சிக்க வேண்டுமேயொழிய, தேவ குமாரன் மீது குறைசொல்லத் துணிந்துவிடக் கூடாது.

இயேசுவின் வார்த்தைகளில் மறைந்திருந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு அத்திமரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம். அத்திமரம் மற்ற மரங்களைக் காட்டிலும் வித்தியாசமானது என்று சொல்வதை விட விநோதமானது என்று கூறுவதுதான் சரியானது. பொதுவாகவே, உலகில் ஏனைய மரங்கள் அனைத்தும் துளிர்த்து, தழைத்து, பூத்துக் குலுங்கி, பிஞ்சாகி, காயாகி பிறகு கனி கொடுக்கும். ஆனால், பெலஸ்தீனா தேசத்தில் வெகுவாகக் காணப்பட்ட இம்மரங்களோ முற்றிலும் வேறுபட்டு, காய்த்து, கனிந்த பிறகு இலைகளைக் கொடுக்க ஆரம்பிக்குமாம். ஆக, இம்மரத்தில் இலைகள் இருந்தால் கனிகள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது யதார்த்த நிலை. ஒருவன் இம்மரத்தில் கனி இருக்குமா? இருக்காதா? என்பதை இதன் இலைகளைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

வேதாகமத்தின் பக்கங்களில் அத்திமரத்திற்கு ஒரு சிறப்பிடம் உண்டு. தேவனால் எத்தனையோ மரங்கள் படைக்கப்பட்டிருந்தாலும் இதன் பெயர்தான் முதன் முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் இலைகள்தான் ஆதிப் பெற்றோரின் நிர்வாணத்தை மறைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆதி. 3:7). என்னும் இம்மரங்களின் கனிப் பெருக்கம் ஒரு தேசத்தின் சுகமான வாழ்வுக்கும் (1 இராஜா 4:25) கனியற்ற நிலைமை அதன் வீழ்ச்சிக்கும் அடையாளமாக குறிப்பிடப் பட்டுள்ளது. சராசரியாக 35 அடி உயரம் வரை வளரும் இம்மரம் கிளைகள் பல விட்டு அகன்ற இலைகளைக் கொண்டிருப்பதால் நல்ல நிழல் தந்து அநேகருக்குப் பயன்தரும் (மீகா. 4:4; யோவான் 1:48) இதன் கனிகள் நல்ல பதார்த்தங்கள் பல செய்வதற்குப் பயன்பட்டதோடு (1 சாமு. 25:18). மருத்துவ ரீதியாகவும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது (2 ராஜா 20:7).

இப்படி நன்மைகள் பல தரும் அத்திமரத்தை இயேசு சபித்திருக்கிறா ரென்றால் அதற்குச் சரியான காரணம் இல்லாமலிருந்திருக்காது. கண்டிப்பாக தன் காலைப் பசியை ஆற்ற உதவவில்லையென்பதற்காக. அவர் சபித்திருக்கமாட்டார். ஏனெனில், அவர் 40 நாட்கள் வெற்றிகரமாக உபவாசமிருந்த தேவகுமாரன். ஆகவே, ஒருவேளை உணவுக்காக அவர் அப்படிச் செய்திருக்கமாட்டார் அல்லது ஏதோ அத்தி மரம் தன்னை ஏமாற்றிவிட்டதென்று எரிச்சலடைந்தும் அதைச் சபித்திருக்கமாட்டார். ஏனெனில், காரித்துப்பிய போதும் கூட கலங்காமல் ஏற்றுக் கொண்டவரவர். அப்படியானால், பின்னே என்னதான் காரணமாக இருக்கும்? ஆம், மாயமான ஒரு தோற்றத்தோடு காட்சி தந்த அந்த மரத்தைக் கொண்டு ஒரு மாபெரும் உண்மையை ஒரு யதார்த்த செய்தியை, தன்னைச் சுற்றிலுமிருந்த மக்களுக்கும், இனிவரும் காலங்களிலெல்லாம் வாழும் மக்களுக்கும் உணர்த்த முடியுமன்று நம்பினதால்தான் அப்படிச் செய்திருப்பார் என்று நாம் திடமாகச் சொல்ல முடியும். ஏராளமாக இருந்த அத்திமரங்களில் ஒன்று பட்டுப் போவதைப் பற்றி அவர் அங்கு கவலைப்படாமல். எண்ணிலடங்காத மக்கள் அம்மரத்தைப் போல, மாயமான வாழ்க்கை வாழ்ந்து. ஆவியில் பட்டுப் போய் விடக்கூடாது

என்பதற்காகவே கவலைப்பட்டார். அதுமாத்திரமல்ல, போலி பக்தியோடு வெளி வேஷமிட்டு வாழ்பவர்களுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை தேவையென் பதையும் உணர்ந்து சரியாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்த எண்ணினார். அதன் விளைவுதான் அத்தி மரம் சபிக்கப்பட்டது புரிகிறதா?

சரி, இந்த வேதபகுதியிலிருந்து, நாம் நமக்குப் பயன்படும் மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I. இயேசு என்ன தேடினார்? - என்ன தேடுகிறார்?

முதலாவது, இயேசு அத்திமரத்தினிடத்தில் என்ன தேடினார்? என்பது. "*அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்தி மரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார்*". (வ. 13) ஆம், இயேசு அதனிடம் கனிகளைத் தேடினார். இங்கே ஒன்றைக் கவனியுங்கள். "*மனுஷர் உள்ளத்தி லிருப்பதை அறியும் இயேசுவுக்கு*" (யோவான் 2:25) மரத்தில் கனியிருந் திருக்குமா அல்லது இருந்திருக்காதா என்பது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. ஆயினும், அதன் புறத்தோற்றம் அப்படியிருந்தபடியால் அவர் தேடினார். அத்திப் பழக்காலமாக இல்லாவிட்டாலும் கூட, *அம்மரம் எல்லா அத்தி மரத்தைக் காட்டிலும் விசேஷமானது என்பதைப் போன்று மாயமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி யிருந்தது. ஆகவேதான் இயேசு கனிகளைத் தேடினார். ஆனால், அங்கோ கனியில்லை.*

இயேசு அத்திமரத்தில் கனியைத் தேடினார் என்பதை விட மாயமான தோற்றத்தோடு சமுதாயத்தில் உலா வந்த யூதர்களிடம் கனிகளைத் தேடினார் என்பது தான் சரி. யூதர்களிடம் அவர் கனியைத் தேடினதற்கான காரணமும் இல்லாமலில்லை. ஆம், பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் (உபா. 7:6). தேவனாலே பல அற்புதங்களைத் தங்கள் வாழ்க்கையில் கண்டவர்கள். ஆச்சரியமாக வழி நடத்தப்பட்டவர்கள். தேவனின் தெய்வீகப் பாதுகாப்பை அனுபவித்தவர்கள். ஆனாலும், அவர்களிடம் கனியற்ற ஒரு போலி வாழ்க்கை தான் காணப்பட்டது. அவர்களாலே ஒரு அத்திமரம் பட்டுப்போயிற்று பாவம்.

அருமையானவர்களே! அன்று மாயமான தோற்றத்தோடிருந்த அத்திமரத்தினிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, தேவனால் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட யூதர்களிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, இன்று நம்மிடத்தில் கனிகளைத் தேடுகிறார். *அன்று தேடினார், இன்று தேடுகிறார்.* ஆம், கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உங்களிடம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள உங்களிடம் கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் உங்களிடம் கனிகளைத் தேடுகிறார்.

நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (எபே. 1:4). இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தி னாலே அழைக்கப்பட்டவர்கள் (1 தெச. 2:14). ஒளியினிடத்திற்கு வரவழைக்கப் பட்டதோடு ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாகவும்,

அவருக்குச் சொந்தமானவர்களாகவும் மாற்றப்பட்டவர்கள் (1 பேதுரு 2:9). ஆனால், நம்முடைய வாழ்க்கை எப்படியுள்ளது? சிந்திப்போம். இயேசு நம்மிடம் உரிமையோடும், ஆவலோடும் வரும்போது, கனிகளைப் பார்க்கிறாரா? அல்லது இலைகளை மாத்திரம் காண்கிறாரா? நெஞ்சிலே கையை வைத்து நாம் பதில் சொல்லவேண்டும். ஆவியின் கனிகள் நம்மிடம் அறவே இல்லை என்பதுதான் உண்மை. நம்முடைய பக்தியின் இலட்சணம் இந்தளவு தான் உள்ளது.

யோவான் நற்செய்தி நூலில் வரும் ஓர் அழகான வசனத்தைக் கவனியுங்கள். " *ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்* " (15:5).

எனக்கருமையான தேவ ஜனமே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் "*இலைகளை மாத்திரம்* " கொண்டிருக்கக் கூடியதாக இருந்தால் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்பது பொருள். ஆகவே, நாம் இலை களோடு, கனிகளையும் கொண்டிருக்க கிறிஸ்துவிலும், அவருடைய உபதேசங் களடங்கிய புதிய ஏற்பாட்டிலும் நிலைத்திருப்போம்.

## II. இயேசு என்ன கண்டார்? - காண்கிறார்?

கனியை ஆவலோடு தேடி அத்திமரத்தின் அருகில் வந்த இயேசு என்னத்தைக் கண்டார்? வசனம் சொல்வதைக் கவனியுங்கள். " *இலைகளை யல்லாமல் வேறொன்றையும் காணவில்லை* " (வச. 13). எப்படிப்பட்ட ஏமாற்றம் பாருங்கள்! ஏற்கனவே சொன்னதுபோல் அவரை ஏமாற்றியது அத்திமரம் என்று மாத்திரம் நினைத்துக் கொள்ளாதீர்கள். யூத மதத் தலைவர்களும், யூதர்களும் சேர்ந்தே இயேசு ஏமாற்றியிருந்தார்கள். *மத்தேயு 23ம் அதிகாரம்* முழுவதும் அவர்களைத் திட்டித் தீர்த்தே எழுதப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ளது போல கடுமையான வார்த்தைகளை இயேசு தனது ஊழியத்தின் பாதையில் பெரும் பாலும் உபயோகித்ததில்லை. அந்த மாயக்காரர்களுடைய வாழ்வில், ஒரு கனி கூட இல்லாமல் " *இலைகளை மாத்திரம் கண்டதால்* " தான் அந்தளவு சுடு சொற்கள் நமதாண்டவரிடமிருந்து எகிறி வந்துள்ளது.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள நமது வாழ்க்கையில், கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற நமது வாழ்க்கையில் இயேசு இன்றைக்கு என்னத்தைக் காண்கிறார்?

இந்த இடத்தில் நாம் நம்மை தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். மெய்யான தேவனை நான் தேவனாகப் பெற்றிருக்கிறேன் என்று மார்தட்டிக் கொள்கிறோம். பரம் செல்ல கிறிஸ்துவின் மார்க்கம் தான் ஒரே மார்க்கம் என்று பெருமை பேசவும் நாம் தவறுவதில்லை. கர்த்தருடைய சபைதான் உண்மை யானது என்று எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டுமென்று பேராசையும் படுகிறோம். அதுமாத்திரமல்ல, வேதம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம் என்றும், வேதம் பேசாத இடத்தில் நாங்கள் மௌனமாக இருக்கிறோம் என்றும் தம்பட்டம் அடிக்கவும் செய்கிறோம்.

ஆனால், உண்மை நிலை என்ன? மிகப் பெரும்பாலும் *இலைகளுள்ள வாழ்க்கையாகவே உள்ளது.* மெய்யான தேவனைப் பற்றிய பயம் நம்மவர்களிடம் மருந்துக்கும் இல்லை. கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பற்றிய முழு உண்மை தெரியவில்லை. புதிய ஏற்பாட்டுச் சபையின் மேன்மையை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை அதை அறிந்திருந்தாலும் அதன்படி வாழ வேண்டுமென்ற வாஞ்சையும் வைராக்கியமும் இல்லை. இவை களனைத்தும் இலைகள் மாத்திரமுள்ள வாழ்க்கையின் அடையாளங்களே. இப்படிப்பட்ட வாழ்க்கையை தேவன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

நம்முடைய ஆன்மீக வாழ்க்கை இலைகள் மாத்திரம் உடையதாயிராமல் கனிகளையும் பெற்றிருக்க வேண்டுமானால் அது தேவனுடைய வார்த்தைகளால் சாரமேற்றப்பட்டிருக்க வேண்டும். அதாவது, வேத வசனங்களுக்கு மாறாக எதையும் செய்யமாட்டேன் என்ற தீர்மானம் எடுப்பதோடு நின்றுவிடாமல் வேத வசனங்களின் போதனைக்கு மாத்திரம் என்னை ஒப்புக்கொடுப்பேன் என்றும் முடிவு செய்ய வேண்டும். அதன் பொருள், நம்முடைய இரட்சிப்பு, நாம் அங்கம் வகிக்கும் சபை நம்முடைய ஆராதனை முறை இவைகளெல்லாம் வேத வசனங்களினடிப்படையில் இருக்கிறதா என்று முழுமையாகச் சோதித்து உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றிலே தவறு செய்தால் கூட எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் என்று வேதம் கூறுகிறபடியால் (யாக். 2:10). நம்முடைய ஆன்மீக வாழ்க்கையைக் கவனமாக சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஆம், ஒன்றிலே தவறிருந்தால் கூட நமது வாழ்க்கை கனியற்ற *இலைகள் மாத்திரம்* உள்ள வாழ்க்கையாகவே காட்சி தரும்.

அன்று அத்திமரத்தை கண்டு இயேசு ஏமாந்ததைப் போல நம்முடைய வாழ்க்கையைக் கண்டும் ஏமாந்து போவார். அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம் அவரை ஏமாற்றுவது தவறு மாத்திரமல்ல. பாவமும் ஆகும். பாவம் நம்மை நரகத்துக்கு அழைத்துச் செல்லும். ஆகவே, இந்த கபட வாழ்வுக்கு இந்நிமிடம் முதல் சாவு மணி அடிப்போம்.

## III. இயேசு என்ன செய்தார்? - என்ன செய்வார்?

இறுதியாக, நாம் அறிந்து கொள்ள வேண்டியது அத்திமரத்திடம் கனியைத் தேடி, இலைகளை மாத்திரம் கண்ட இயேசு என்ன செய்தார் என்பது. வசனம் சொல்வதை இங்கே பாருங்கள். "*இதுமுதல் ஒருக்காலும், ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்*" (வச. 14). ஆம், அங்கே வேஷமிட்ட விருட்சத்தை சபித்தார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார் என்பதை கவனிக்கத் தவறிவிடாதீர்கள். இந்தப் பருவத்திலே மாத்திரமல்ல, "ஒருக்காலும்" கனியிருக்காது என்றார். மறுநாள் காலையில் பார்க்கும் போது, மரம் *பட்டுப்போயிருந்தது* என்று வசனம் சொல்கிறது (11:20).

ஏற்கனவே, நாம் பார்த்தது போல, அத்திமரத்தைச் சபித்து அதைப் பட்டுப் போகச் செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசையல்ல. ஆனால், தன்னைச்

சுற்றி நின்றவர்களிலும், யூத சமுதாயத்திலும் இருக்கிற ஏராளமான மக்களின் வேஷத்தை, போலியான பக்தியை, மாயமான தோற்றத்தைக் களைந்தெறிய வேண்டுமென்பது தான் அவரின் ஒரே நோக்கம். அங்கே நடப்பதைப் பார்த்து ஜனங்கள் திருந்த வேண்டுமென்பது அவரின் அதிரடித் திட்டம்.

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம் கனிகொடாத வாழ்க்கை வாழ்ந்தபோது பூமியின் சகல ஜனங்களுக்குள்ளும் அவர்கள் சிதறிப்போகும்படி தேவன் செய்தார். (1 ராஜா 9:6,9).

எனக்கு அன்பானவர்களே! கனியில்லாத அத்திமரத்தையும், தனக்கு உண்மையில்லாத இஸ்ரவேல் தேசத்தையும் தண்டித்த நம் ஆண்டவர் நம்மை மாத்திரம் சும்மாவிட்டு விடுவார் என்று எண்ணுகிறீர்களா? அவரை நாம் நீதியுள்ள தேவன் என்று வாய் நிறையச் சொல்கிறோம். அது உண்மையானால், அந்த நீதியை நம்மீது செலுத்தாமல் விட்டு விடுவாரா? கண்டிப்பாக நீதியாக நியாயந் தீர்த்தே தீருவார்.

யோவான் 15:6ல் கனிகொடாத கொடி அக்கினியிலே போடப்படும் என்று காண்கிறோம். கவனிக்க மறந்துவிடாதீர்கள். "*அக்கினியிலே*" என்று உள்ளதை, "அதாவது எரிந்து, வெந்து, முடிந்து போகும் அக்கினியிலே போடப்படும்". ஆனால், மத்தேயு 25:14 ல் நியாயத்தீர்ப்பில் இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து இவ்விதம் சொல்வார் என்றுள்ளது. சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக் காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற " நித்திய அக்கினியிலே போங்கள் " என்று.

ஆம், " *நித்திய அக்கினி, அது முடிவில்லாத அக்கினி, எரிந்தும் முடிந்து போகாத அக்கினி* " . மரத்திற்கு முடிந்து போகும் அக்கினி, மனிதனுக்கு நித்திய அக்கினி, நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கனி கொடாத மனிதனை, இலைகள் மாத்திரமே கொண்டுள்ள மனிதனை இவ்விதமாகவே நியாயந்தீர்ப்பார். தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள்.


ஆகவே, அன்பானவர்களே! இருதயத்தை சோதித்தறியும் தன்மை கொண்ட தேவனுக்கு முன்பாக நாம் பயந்து நமது வாழ்க்கையில் அவரின் வல்லமையான வசனங்களுக்கு நடுங்கி ஜீவிப்போம். இலைகள் மாத்திரம் உள்ள ஒரு போலியான வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு, கிறிஸ்துவில் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து, நிறைந்த கனிகளைக் கொடுத்து, சபைக்கும், சமுதாயத்துக்கும் சாட்சியாக வாழ்வோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். மறுமையை சுதந்தரித்து அவரோடு கூட நித்திய வாழ்வு வாழ்வோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**நன்றி! நன்றி!**

கடந்த அக்டோபர் 14,15 ஆகிய தேதிகளில் காங்கேயத்தில் நடந்த 16 ஆம் வேதாகம கருத்தரங்கில் திரளாய் பங்கு பெற்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறேன். – ஆசிரியர்

# ஏன் நாங்கள் நியாயத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்?



**Bro. J.C. சோட்**

நியாயத்தீர்ப்பு நாள் என்று ஒன்று இருக்குமென்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதன் பொருள், நாம் நம்மைப் பற்றியும், இந்த வாழ்க்கையில் நாம் பேசின, செய்த, எல்லாவற்றையும் குறித்தும் கணக்கொப்புவிக்க வேண்டும். பெரும்பாலான ஜனங்கள், தாங்கள் செய்தவைகளைக் குறித்து யாருக்காவது கணக்கொப்புவிக்க வேண்டும் என்கின்ற கருத்தை விரும்புவதில்லை. அவர்கள் தவறு செய்யும்போது, காவல் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல விரும்புவதில்லை. அதுபோல, அரசாங்கத்திற்கு முறையாக வரிசெலுத்துவதற்கான பொறுப்பை ஏற்க விரும்புவதில்லை. ஆனால், இவைகளெல்லாம் வாழ்வின் உண்மைகளாயிருக்கிறது. வேலை செய்பவர் முதலாளிக்கு பதில் கொடுக்க வேண்டும்; பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ செல்பவர்கள் தேர்வு எழுதியாக வேண்டும்; இராணுவத்தில் இருப்பவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இப்படியாக, நம்முடைய வாழ்க்கையின் பல நிலைகளிலும் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். நாம் முதலாளிகளாக, செல்வந்தர்களாக, அல்லது நாம் மரித்துப் போனவர்களாக இருந்தாலொழிய இப்பொறுப்புகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழியே இல்லை. ஆனால், செல்வந்தர்கள், தேசங்களின் தலைவர்கள், இன்னுமாக உயிரோடிக்கிறவர்கள், மரித்தவர்கள் இப்படி எல்லோரும் ஒரு நாள் தேவனுடைய நியாயசனத்திற்கு முன்பாக நின்றே ஆக வேண்டும்.

எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார், "*அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே*" என்று (எபி. 9:27). ஆனால், நியாயத்தீர்ப்பு நாளில் யாரெல்லாம் அங்கே இருப்பார்கள்? இது சம்பந்தமாகப் பவுல் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். "*ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்*" (II கொரி. 5:10). அங்கே வெறுமனே ஒரு நியாயத்தீர்ப்பு மாத்திரமல்லாமல், அந்த நியாயசனத்திற்கு முன்பாக, நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்து முன்பாக எல்லோரும் தோன்றி, சரீரத்தில் அவனவன் செய்த நன்மையான மற்றும் தீமையான காரியங்களுக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதினார். "*நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கின்றோம்; ஆகையால், பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவும், மரித்தோர் மேலும், ஜீவனுள்ளோர் மேலும், ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும்,*

*எழுந்தும், பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாம் எல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்*" (ரோமர் 14:7-12).

அத்தனே பட்டணத்து மக்களோடு பேசும் போது பவுல், "*அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றார்*" (அப். 17:30,31). தேவன் ஒருநாளை நியமித்திருக்கிறார். அதிலே இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். அதன் பொருள், தேவன் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார், அந்த நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும். அது நேர்மையற்ற முறையில் இருக்காது. நியாயத்தீர்ப்பில் தேவன் பட்சபாதம் காட்டமாட்டார் அல்லது அவர் பாரபட்சமாக நடந்து கொள்ளமாட்டார். அந்த நாள் எப்போது என்று நமக்குத் தெரியாது. ஆனால், தேவனுக்குத் தெரியும். கர்த்தருடைய வருகையும் அப்படித்தான். அந்த நாள் தேவதூதர்களுக்குக் கூடத் தெரியாது. பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு மட்டுமே தெரியும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார். தேவதூதர்களுக்குக்கூடத் தெரியாது. பிதாவுக்கு மாத்திரமே தெரியும் என்பது உண்மையானால், மனிதன் எப்படி அறிந்து கொள்வான்? கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்பதும், நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதும் நிச்சயமாக மனிதனுக்குத் தெரியாது. மேலும், தேவன் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். நிச்சயமாகவே, அந்த மனுஷன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து.

பவுல் பேலிக்ஸ்க்கு முன்பாக நின்றபோது, அவருக்கு பிரசங்கம் பண்ணினதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. பேலிக்ஸ்சும், துருசில்லாளும், விபச்சாரத்தில் இருந்ததாக நமக்கு வசனம் சொல்கிறது. "*அவன் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன்*" என்றான் (அப். 24:25). பேலிக்ஸ் எவ்வகையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை அறிந்த பவுல், பேலிக்ஸ் தன்னுடைய செயல்களுக்கெல்லாம் தேவனுக்கு பதிலளிக்க வேண்டுமென்று சொல்லி பேலிக்ஸை எச்சரிக்க தைரியமுடையவராய் இருந்தார். அப்பொழுது, பேலிக்ஸ் நடுங்கியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அது அவனை பயமடையச்

செய்தது. ஆயினும், அவன் பவுலுக்கு செவிக் கொடுக்காமல் பவுலிடம், இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன் என்று சொல்லி அனுப்பியது மிகவும் துக்கமானது. நமக்குத் தெரிந்தவரை, பின்பு அவன் ஒரு போதும் பவுலை அழைத்ததாக இல்லாததால், அவன் அந்நிலையிலேயே மரித்திருக்க வேண்டும். எவ்வளவு பரிதாபம் !

தன்னுடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள ஜனங்களிடத்தில் இயேசு ஆண்டவர் பேசிக் கொண்டிருக்கும் போது, "*விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளே எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய்ப்பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்தி லிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான், மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக் கொப்புவிக்க வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தை களினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்*" (மத். 12:34-37). அதன் பொருள், ஒருவர் தான் என்ன செய்கிறார் என்பதைக் குறித்து மாத்திரம் எச்சரிக்கை யாயிராமல் தன்னுடைய எண்ணங்களைக் குறித்தும், என்ன சொல்லுகிறார் என்பது குறித்தும் உணர்வுள்ளவராயிருக்க வேண்டும். ஒருவர் தான் எப்படிப் பட்டவர் என்பதைக் காட்டுவதற்கு இவைகளெல்லாம் ஒன்றோடொன்று இணைக் கப்பட்டிருக்கிறது. ஒருவர் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் அவை எல்லா வற்றையும் குறித்து ஒரு நாளில் கணக்கு கொடுக்க வேண்டுமென்று ஒருவருக்கு மனதில் இருக்க வேண்டும். இதை ஒருவர் அறிந்து கொள்வது, அவரை அதிக ஜாக்கிரதையுள்ளவராக்கி ஒரு காரியத்தைப் பேசுவதற்கோ அல்லது செய்வதற்கோ முன்பாக ஒன்றுக்கு இருமுறை சிந்திக்கச் செய்கிறதாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது, "*ஒரு நாள் வரும் அதிலே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார்*" என்றார் (ரோமர் 2:16). எபிரெய எழுத்தாளர், "*தேவனு டைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும், இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்*" என்று நமக்கு நினைவுப்படுத்துகிறார் (எபி. 4:12,13). இன்னும் பவுல், "*ஆயினும் நான் உங்களா லேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது ; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆயினும், அதனாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆதலால் கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில்*

*மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனை களையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்* " (I கொரி. 4:3-5). மேலும் பவுல், நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகு தலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிற தாவது (I தீமோ. 4:1). பவுல் தொடர்ந்து தம்மைப் பற்றி சொல்லும் போது, " *இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத்தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்* " என்றார் (II தீமோ. 4:8). இங்கே பவுல் கர்த்தர் நீதியுள்ள நியாதிபதியாக இருந்து தனக்கு நீதியின் கிரீடத்தை அந்நாளிலே தந்தருளுவார் என்று சொல்கிறார். இங்கே, அந்நாள் என்பது நியாயத்தீர்ப்பு நாளைக்குறிக்கிறது.மேலும் பவுல், அப்படிப்பட்ட கிரீடம் தனக்கு மாத்திரம் கிடைக்காமல், கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அல்லது அவருடைய வருகைக்காகத் தங்களை ஆயத்தமாக்கியிருக் கிறயாவருக்கும் கிறிஸ்து தருவார் என்று கூறுகிறார்.

இப்போது, நாம் இதுகாறும் பார்த்தவைகளைத் தொகுத்து, நாம் எவை களைக் கண்டறிந்தோம் என்று தயவு செய்து கவனியுங்கள்.

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளிலே வருகிறது. ஆனால், அது மரணத்திற்குப் பிறகு இருக்கும் அல்லது கர்த்தருடைய வருகையின் போது இருக்கும்.

2. அந்த மகா நாளில் எல்லோரும் இருப்பார்கள். இதுவரை வாழ்ந்த எல்லா மக்களும், இனிமேல் வாழப்போகிற மக்களும் அந்நாளில் அங்கே இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். ஒருவராலும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ முடியாது. யாரும் கண்டு கொள்ளாமல் விடப்படமாட்டார்கள். இதில், இளம் வயதினரும், முதியோரும், நல்லோரும், தீயோரும், ஏழைகளும், பணக்காரரும், ராஜாவும், வேலைக்காரரும் என்று எல்லோரும் அடக்கம்.

3. தேவன் தம்முடைய குமாரனனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்.

4. அது ஒரு பாரபட்சமற்ற நியாயத்தீர்ப்பாய் இருக்கும். அதில் எல்லோரும் தங்கள் கிரியைகளின்படி, அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையானதாக இருந்தாலும் சரி, அதன்படி நியாயத்தீர்க்கப்படுவார்கள்.

5. அந்த மகாநாளில், ஒவ்வொரு வெறுமையான வார்த்தையும், ஒவ்வொரு செயலும், அந்தரங்கமான ஒவ்வொரு யோசனையும் நியாயந் தீர்க்கப்படும்.

6. இந்த நியாயத்தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். அங்கே இரண்டாவது வாய்ப்புக்கு இடமேயில்லை. அது ஒரு நீதியுள்ள நியாயத்தீர்ப்பாயிருக்கும்.

7. அந்த நாளிலே, நீதிமான்களுக்கு நித்தியஜீவன் அளிக்கப்படும். துன்மார்க்கர் பிசாசின் நரகத்திலே நித்திய அழிவைப் பெறுவார்கள்.

நியாயத்தீர்ப்பிலே கர்த்தரை சந்திக்க ஆயத்தமாகிவிட்டீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். " *என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்* " (யோவான் 12:48). கிறிஸ்து இவ்விதமாகவும் சொன்னார். " *மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது ; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக் கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது*" (யோவான் 5:25-30).

என் நண்பர்களே, நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களி லிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து இயேசுவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், நீங்கள் இந்தநியாயத்தீர்ப்பின் மகா நாளுக்காக ஆயத்தமாக முடியும். அதைச் செய்யும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன் பின்பு, ஒரு கிறிஸ்தவனாக கர்த்தரை சேவித்து, அவருக்கு மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஒரு நாளில் அவருக்கு முன்பாக நிற்கும் போது, கர்த்தர் உங்களைப் பார்த்து, நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று சொல்வதை உங்களால் கேட்க முடியும். அது எவ்வளவு அருமை யானதாக இருக்கும்? இது குறித்து யோசித்துப்பாருங்கள். இன்னும் உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே அதற்காக ஆயத்தமாகுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும் படியாக நாங்கள் ஜெபிக்கிறோம்.

..... பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்.... (ரோமர் 10:14,15)

பெண்கள் பகுதி

# "ஒரு பெண் மனைவியாகும்போது அவள் வீட்டை உருவாக்குகிறாள்"

**B B CHOATE** **RR NAYAGAM**

திருமணமும், வீட்டு வேலையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது. அவைகள் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துள்ளது, அவைகளைப் பிரிக்க முடியாது. நாம் ஒரு மனிதனை விவாகம் பண்ணும்போது, அவருக்காக ஒரு வீட்டை உருவாக்க வேண்டும் என்ற பொறுப்பு நமக்கு இயல்பாகவே வந்து விடுகிறது. வீட்டை உருவாக்குதல் என்பது உலகத்தில் ஓர் உயர்தரமான வேலை. எந்த ஒரு பெண்ணும் இதைக் குறித்து வெட்கப்படக்கூடாது. இந்த இடத்திற்காக தேவன் அவளை குறித்துள்ளார். இங்கு தான் அவள் தன் திறமையை வெளிக்கொணர முடியும். இதுதான் அவளுக்கு மேலான இடம்.

வீட்டை உருவாக்குதல் பற்றிப் பேசும்போது சரீரப்பிரகாரமான காரியங்களைப் பேசாமல் விட்டுவிட முடியாது. சரீரப் பிரகாரமானவைகள் நல்ல முறையில் இருந்தால் தான் ஆவிக்குரிய விஷயங்களை அதிக அளவில் உயர்த்திக் கொள்ள முடியும். சரீரப்பிரகாரமானவைகள் என்று பார்க்கும் போது, நல்ல, கடினமான, உண்மையான வேலைகள் ஆகும். வீட்டைப் பராமரிப்பதில் முதல் படி, வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதாகும். நம்முடைய வீட்டைப் பிரகாசமாகவும், அழகாகவும், மகிழ்ச்சி பொங்கும் வகையில் வைத்துக் கொள்ள வேண்டும். கணவன்மார்கள் பரபரப்பான தங்கள் வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்புகிறார்கள். அவர்கள் பணி முடிந்து வீட்டுக்கு வரும்போது, நாம் நம்முடைய வேலைகள் எல்லாம் முடிந்துள்ளதா என்று பார்த்துக் கொண்டு அவருக்கு சுத்தமான ஒரு தோற்றத்தைக் காட்டின பின்பு அவரோடு சில நேரங்களை செலவழிக்க வேண்டும்.

மனைவியானவள் தன் வீட்டை நேர்த்தியாகவும், ரசனையாகவும் வைக்க கடமைப்பட்டுள்ளாள். தட்டுமுட்டு சாமான்கள் எவ்வளவு விலை அதிகமானது என்பது இங்கு முக்கியமல்ல. மாறாக, அவைகள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டு அதினதின் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் முக்கியம்.

அமைப்பாளர் என்ற வார்த்தை ஒருவேளை நமக்கு பிடிக்காமல் இருந்தாலும் நல்ல ஒரு வீட்டை உருவாக்க நாம் சிறந்த அமைப்பாளர்களாக இருக்க வேண்டும். திடீரென்று இந்தக் காரியத்தை செய்து விட முடியாது. இது அதிகமான, கடின வேலைகள், திட்டமிடுதல், அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.

ஒரு நல்ல வீட்டை உருவாக்குபவர் வரவு செலவுகள் பார்ப்பதில் அறிவுள்ளவளாக இருக்க வேண்டும். ஒருவேளை இதில் தான் மற்றவற்றைக் காட்டிலும் அதிக சிக்கல்கள் வரும். தன் கணவனின் வருமானத்துக்குள் வாழ கற்றுக்கொள்ளாதவள் முட்டாள் ஸ்திரீயாகவும்

தன் கணவனின் துரித மரணத்திற்குக் காரணமுமாகிறாள். ஆனால், தேவனுடைய திட்டப்படி இந்த விஷயத்தில் நாம் நம் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும்.

தாங்கள் வருமானத்திற்குள்ளாக வாழும் ஓர் மனைவி தன் கணவனுக்கு ஒரு விலைமதிப்புள்ள வெகுமதியாகத் திகழ்கிறாள்.

தேவனுக்கு பயப்படும் ஒரு மனைவியின் நேர்மறை குணநலன்களை பார்த்தோம். இனி ஒரு மனைவி எப்படி இருக்கக் கூடாதென்று சில உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்.

**ஒரு மனைவி மற்ற காரியங்களுக்குத் தன் கணவனை விட முதலிடம் தரக்கூடாது.**

ஒரு திருமணத்தின் அடிப்படைக் கருவிகளே கணவனும், மனைவியும் தான் கணவன் தலைவனாகவும், மனைவி அவனுக்கு துணையாகவும் தான் இருக்க வேண்டுமேயொழிய எந்த ஒரு காரியமும் இந்த உறவு முறைக்கு கெடுதலாக வந்து தேவனின் திட்டத்தை உருக்குலைந்து போகும்படி செய்து விடக்கூடாது. மனைவியானவள் எந்த ஒரு காரியத்தையும், யாரையும் தன் கணவனுக்கும் மேலாக வைத்து விடக்கூடாது. அப்படி ஒரு செயலாவது, வேறு ஒரு நபராவது கணவன், மனைவி உறவுக்கிடையில் வந்தால் அதை கண்டறிந்து உடனே அதைக் களைந்து போட்டு பழைய நிலைக்கு வந்துவிட வேண்டும். ஏனென்றால், தேவதிட்டத்தை நாம் அழித்து விடக் கூடாது.

**ஒரு மனைவி சந்தேகப்படுகிறவளாக இருக்க கூடாது**

கிறிஸ்தவ திருமணங்களில் சந்தேகத்திற்கே இடமிருக்கக்கூடாது. தன் மனைவியை நம்புகிற ஒரு கணவன் அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்து விடுவாளோ என்று நினைக்க வேண்டிய அவசியமில்லை. தன் கணவனில் அன்பு கூருகிற ஒரு மனைவி அவனுடைய வார்த்தையிலோ, செய்கையிலோ, சந்தேகப்படத் தேவையில்லை. சந்தேகம் என்பது ஒன்றுமையின்மை, குழப்பம், துயரம் இவைகளைக் கொண்டு வருவதுடன் கிறிஸ்துவக் குடும்பம் என்ற அந்தஸ்தையே இழக்கச் செய்கிறது. சரியன நம்பிக்கையும் அன்பும் இருக்குமானால் அங்கு சந்தேகத்திற்கே இடமிருக்காது.

**ஒரு மனைவி குற்றங்கண்டு வசைபாடுகிறவளாகவும், சச்சரவு பண்ணுகிறவளாகவும் இருக்கக் கூடாது**

பல சமயங்களில் மனைவிகளின் வசைபாடுதல், சண்டை, சச்சரவு செய்தல் போன்ற காரியங்கள், கணவன் தன்னை தேற்றி ஆதரிக்கிற மற்ற கரங்களை அடைக்கலமாகக் கருதி சென்றுவிட வாய்ப்பு வந்து விடுகிறது. ஏனெனில், "சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்த்திலும் வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்கு வதே நலம் (நீதி. 19:13). மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு " (நீதி. 19:13).

சிம்சோனின் கதையில் அந்தப் பெண் ஓயாமல் நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும், அவள் திருப்தி யடையவில்லை. தெலீலாள்,

சிம்சோனின் பெலம் எதினால் உண்டாயிருக்கிறது என்று அறிய விரும்பி தொடர்ந்து அவனை தொந்தரவு செய்து கொண்டேயிருந்தாள். " இப்படி அவனைத் தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு " (நியாதி. 16:16) என்றுள்ளது. அவன் சாகத்தக்கதாய் அவனிடம் வசைபாடிக் கொண்டேயிருந்தாள். அவனின் பலம் எதில் இருக்கிறது என்பதை தெரியும் வரை நச்சரித்தாள். இது நமக்கும் ஒரு பாடமாக அமையும்.

## ஒரு மனைவி தன் கணவனின் குடும்பத்தாரை கோபித்துக் கொள்ளக்கூடாது

ஒரு பெண் ஒரு வாலிபனை விவாகம் செய்யும்போது அவனுடைய குடும்பத்தையும் தன்னோடு சேர்த்துக் கொள்ள ஒத்துக்கொள்கிறாள். தன் கணவன் தன்னுடன் எவ்வளவு நெருக்கமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாளோ அதே போல் இவளும் அவர்களுள் ஒருத்தியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தான் நேசித்து, தன் கணவனாக ஏற்றுக்கொண்ட அவர், அவருடைய பெற்றோரின் உதவியில்லாமல் வரவில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தன் கணவனை இப்படி உருவாக்கி தனக்கு கொடுத்த அந்தப் பெற்றோருக்கு நன்றியாக இருக்க வேண்டும்.

பெண்களின் குணநலன்கள் நீதி. 31ம் அதிகாரத்தில் பட்டியல் போட்டு காட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளும் எழுந்து அவளை பாக்கியவாதி என்பார்கள். தன் கணவன் புகழ்வதைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்கு கிடைக்கும் வெகுமதி உலகில் வேறு எதுவுமில்லை. நம்முடைய நல்ல வாழ்க்கையானது இந்த உலகில் ஒரு முழுமையான, சௌகரியமான வாழ்விற்காக மட்டுமல்லாது நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கும், நம்முடைய கணவன், பிள்ளைகள் இவர்களின் இரட்சிப்புக்கும் ஏதுவாக இருக்கும்.

நாம் நம்முடைய வழிகளை ஆராய்வேம். நம்முடைய குறிக்கோளை ஆராய்வோம். நம்முடைய வீட்டை எவ்வாறு கட்டிக் கொண்டுள்ளோம்? வீட்டை அழித்துக் கொண்டுள்ளோமோ? திருமணமான ஒவ்வொரு பெண்ணும் அவசியம் நீதி 14:1ம் வசனத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். " *புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்* ". நாம் கட்டுகிறோமா? இடிக்கிறோமா? முடிவு நம்முடையது. நாம் என்ன செய்யப் போகிறோம் " மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான் ". (நீதி. 18: 22). நம்மைப் பார்த்து நம்முடைய கணவனும் பிள்ளைகளும், மகிழ்வார்களாக!

**தன் காலத்தில் தன் எண்ணங்கள் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறவன், வரப்போகும் எல்லாக் காலத்திலும் அந்தத் தாக்கத்தை ஏற்படுத்துகிறவனாயிருக்கிறான்.**

வாலிபர் பகுதி

# பயிற்சியினால் பகுத்தறிதல்

**Bro. Benny Martin**

பிரியமான வாலிப சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துக்கள். பொதுவாகவே, வாலிபர்கள் தங்கள் சரீரத்தைப் பேணிக்காப்பதில் அதிக அக்கறை செலுத்துவதுண்டு. உடலுக்கு தேவையான சத்தான உணவை உட்கொள்வதிலும், உடலுக்கு தீங்கிழைக்கின்ற உணவுப் பொருள்களிலிருந்து விலகியிருப்பதிலும் அதிக அக்கறைப்படுவதுண்டு. சில வாலிபர்கள் ஒருபடி மேலே சென்று உடற்பயிற்சி செய்து தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி செய்வதில் எந்தத் தவறும் கிடையாது. அதனால் உடலுக்குப் பிரயோஜனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும். அப்போஸ்தலனாகிய பவுல் (1 தீமோத். 4:8)ல் சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று புத்திமதிச் சொல்கிறார். இதன் மூலம் சரீர முயற்சி அற்ப அல்லது கொஞ்ச பிரயோஜனமுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இவ்வசனத்தின் மேன்மையை உணராத பல வாலிபர்கள் அழிந்து போகும் இவ்வுடலை மேம்படுத்த தங்கள் பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்கிறார்கள். இவ்வசனத்தில் பவுல் சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கும், ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் இடையே உள்ள ஒப்புமையை பிரித்துக் காட்டுகிறார். சரி, இப்போது சரியான ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு என்னவெல்லாம் அவசியப்படுகிறது என்பதை அறிந்து கொள்வோம்.

## I. ஆயத்தம்

பொதுவாக, சரீரப்பிரகாரமான உடற்பயிற்சி செய்வதற்கு முதலில் நாம் ஆயத்தமாக வேண்டும். அதாவது, மனதில் உடற்பயிற்சி செய்ய தீர்மானிக்க வேண்டும். பயிற்சியைத் தொடங்க விருப்பமிருக்க வேண்டும். அதைப் போலவே செயல்படுவதற்கும் ஆவல் இருக்க வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் இது உண்மையாயிருக்கிறது. 1 பேதுரு 1:13ல் ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம். எனவே, ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பாக மனதளவில் ஆயத்தமாக வேண்டும். மனதில் தீர்மானித்து ஆயத்தமானவுடனே நாம் செயல்படத் தொடங்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் அனுதினமும் கேட்கிறோம்.

அவைகளை உள்வாங்கிக் கொண்டு கேட்டவைகளை நாம் நடைமுறைப்படுத்தும் போது ஆவிக்குரிய உடற்பயிற்சியைச் செய்கிறோம். அதுபோல், உடற்பயிற்சி என்று வரும்போது சில காரியங்களை திரும்ப திரும்பச் செய்ய வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியில் எப்படி? சிறிது நேரம் ஜெபித்து விட்டு நாம் பக்தியாக இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. ஒன்றிரண்டு வசனங்களை வாசித்து விட்டு நாம் தியானிக்கிறோம் என்று சொல்ல முடியாது. அதுபோல் வாரத்தில் ஒருமுறை தேவனை ஆராதித்து விட்டு நாம் தேவனுக்கு உண்மையாக இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. சிலர் கிறிஸ்துவுக்குள் வந்ததும் ஆரம்ப நாட்களில் மிகவும் ஊக்கமாக ஜெபிப்பார்கள். ஆனால், பாடுகள் வரும்போது அப்படியே பின்வாங்கிப் போவார்கள். சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியை ஒருவர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு செய்துவிட்டு சில நாட்கள் கழித்து அதைத் தொடர்ந்து செய்யாத போது சரீரத்திற்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறாரோ, அதேபோல் தான் ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு அதைத் தொடர்ந்து செய்யாமல் விட்டு விட்டால் தன் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துவார். விடாமுயற்சி இல்லாமல் உலகில் எந்த செயலிலும் ஜெயிக்க முடியாது. சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் கூட தொடர்ச்சி இல்லையென்றால் அது உடலில் பின் விளைவுகளை ஏற்படுத்தும். அப்படியிருக்கும் போது, ஆவிக்குரிய உடற் பயிற்சியில் தேவனுடைய வார்த்தைகளை அப்பியாசப்படுத்துவதில் தொடர்ச்சி இல்லையென்றால் அது ஆவிக்குரிய வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும்.

## II. எதிர்க்கும் திறன்

சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் பயிற்சி செய்ய முடியாதபடி அதற்கு தடைகள் ஏற்படும்போது அவைகளை எதிர்த்து தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால் தான் உடற்பயிற்சியின் நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக உடலை வருத்தி கடினமான பயிற்சியில் ஈடு படுகிறார்கள். நாமும் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் அதாவது, தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ளும்போது பிசாசால் வேதனைகள் வரும்போது அவைகளை எதிர்த்து நாம் வீர நடை போட வேண்டும். அப்போது தேவன் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்குவார் (1 கொரி. 10:13). நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொண்டு அவைகளை எதிர்க்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (எபே. 6:13).

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படும் பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் போன்றவைகளை நாம் மேற்கொண்டு, தீங்கை எதிர்த்து நலமானவைகளை பற்றிக் கொண்டால் தேவ பக்தியோடே ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட முடியும். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்ப்புகளோ, தடைகளோ இல்லை யென்றால் நாம் மெத்தனப் போக்கை கடைபிடித்து வளராமல் இருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அனுதினமும் வளர வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். வேத வசனங்களில் நாம் பார்க்கும் போது எருசலேமிலுள்ள சபைக்கு துன்பம் உண்டான போது அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் சிதறப்

பட்டுப் போனார்கள். சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள், சபை வளர்ந்தது (அப். 8).

பிரியமான வாலிபக் கண்மணிகளே! இதுகாறும் நாம் சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியை விடாது தொடர்ந்து செய்யும்போது அதன் நன்மைகளை அனுபவிக்கிறோம். ஆனால், சோம்பேறித்தனத்தாலோ, தடைகளினாலோ, பாடுகளினாலோ நாம் அதை விட்டுவிட்டால் அல்லது பின்வாங்கிப் போனால் அது நம் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தும், தேவனுடைய ஆத்துமா நம்மில் பிரியமாயிராது (அபி. 10:38) என்று கற்றுக்கொண்டோம். அவைகள் நீங்கள் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறேன்.

## III. ஆவிக்குரிய போஷாக்கு

எப்படி சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கு ஆகாரம் அவசியமாகிறதோ அதே போல் ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் ஆகாரம் அவசியமாகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதேபோல் அனுதினமும் நாம் பலவிதமான சவால்களை, சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர் நீச்சல் போட நமக்கு பெலனற்றுப் போகும்போது நம் உறவினர்களிடம், நண்பர்களிடம் திரும்பு கிறோம். அவர்கள் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப்போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே வார்த்தையில் தான் உள்ளது. எனவே, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளை நாம் பற்றாக் குறையால் தான் பலர் பாவமென்னும் நோயில் சிக்கிக் கொள்கிறார்கள். இன்று பசுமைப் புரட்சி என்ற பெயரிலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானியங்களை பெருக்குகிறோம் என்று சொல்லி முறையற்ற முறையில் நச்சு நிறைந்த, கலப்படமான, தூய்மையற்ற ஆகாரத்தை தயார் செய்கிறார்கள். அதன் விளைவாக வாயில் நுழையாத பெயர்களுடன் நோயகள் வலம் வந்து நம்மை தாக்குகின்றன. அதை தாக்குபிடிக்க முடியாமல் மனித இனம் மண்ணுக்குள் மடிந்து போகிறது. மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற, கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை இனிமையாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாமல் இருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் ஆவிக்குரிய போஷாக்கைத் தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமாக அப்பியாசப்படுத்தவில்லையென்றால் அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதற்கு அதிக விலையை நாம் கொடுக்காதபடி விழித்திருப்போம்.


சிறுவர் பகுதி

# "BIBLE" "பரிசுத்த வேதாகமம்"

Dr. ABEL R. NAYAGAM

அன்புள்ள குழந்தைகளே! வாழ்த்துகிறேன் உங்களை. வேதாகமம், அதாவது "பைபிளை" நீங்கள் எல்லோரும் கட்டாயம் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன் உங்கள் அனைவரின் வீட்டிலும் அது இருக்கும்.

இந்தப் புத்தகம் ஏனைய புத்தகங்களைக் காட்டிலும் வித்தியாசமானது. இந்த உலகத்திலேயே மிக முக்கியமான புத்தகம் ஒன்று உண்டு என்றால் அது "வேதாகமம்" ஒன்றுதான். வேதாகமம் ஒரு பெரிய கடிதம். மீண்டும் மீண்டும் நாம் அதைப்




யாராவது 66 புத்தகங்களை ஒரே நேரத்தில் தூக்க முடியுமா? சொல்லுங்கள். உங்களால் முடியாது. சரி, வேதாகமத்தை கையிலே எடுங்கள். இப்பொழுது நீங்கள் 66 புத்தகங்களைத் தூக்கிவிட்டீர்கள். நீங்களே "கிளேப்" பண்ணிக் கொள்ளுங்கள்.

ஆம், வேதாகமம் என்றால் புத்தகங்களின் புத்தகம் என்று பொருள். 66 புத்தகங்கள் அடங்கிய ஒரு புத்தகம்.

படிக்கும்போது பெரிய பல உன்னதமான காரியங்களை கற்றுக் கொள்ள முடியும்.

66 புத்தகங்களில் ஒன்றான சங்கீதப் புத்தகம் " உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (119:105) என்று போதிக்கிறது. எப்படி நாம் நடக்க வேண்டுமென்று

நம்முடைய பாதைக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

வேதாகமம் மிக, மிக முக்கிய மான செய்தி ஒன்றை தனக்குள் வைத்திருக்கிறது. என்ன தெரியுமா? யோசித்துப் பாருங்கள். அது தான் "I Love You" "நான் உன்னை நேசிக்கிறேன்" என்பது.

வேதாகமம் இன்றைக்கு நாம் எப்படி வாழ்வது என்பதை மட்டும் கற்றுக் கொடுப்பதோடல் லாமல், எப்படி ஒருநாளில் நாம் பரலோகம் போவது என்பதைப் பற்றியும் கற்றுக் கொடுக்கிறது.

சரி, இந்த வேதாகமத்தை யார் எழுதினது? பரலோகத்தின் தேவன். சரியான பதிலை கூறினீர்கள். தேவன் தனக்காக 40 மனிதர்களைத் தெரிந்து கொண்டு இந்தப் புத்தகத்தை எழுதினார். தேவன் இந்தப் புத்தகத்தை யாருக்காக எழுதினார்? உலகில் உள்ள அனைத்து மக்களுக்காகவும் இந்த புத்தகம் எழுதப்பட்டது. எல்லோரையும் தாம் நேசிப்பதை இந்த உலகம் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

வேதாகமம் இன்றைக்கு நம்முடைய கைகளில் இருப்பதைப் போன்று புத்தக வடிவத்தில் அந்நாட்களில் இல்லை. "சுருள் களாக" இருந்தது. வேதாகமத்தை இரண்டு பெரிய முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். 39 புத்தகங்கள் அடங்கிய பழைய ஏற்பாடு, 27 புத்தகங்கள் அடங்கிய புதிய ஏற்பாடு என்று. பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் சுமார் 1500 வருட சம்பவங்களை உள்ளடக்கிய ஒன்று. புதிய ஏற்பாடு சுமார் 100 வருட சம்பவங்களை உள்ளடக்கி கிரேக்க மொழியில் எழுதப் பட்ட ஒன்று. ஆக, சுமார் 1600 வருடங் களுக்கான சம்பவங்கள் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன.

அருமையான தம்பி, தங்கைகளே! நம் கையில் உள்ள வேதாகமத்தின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா? பைபிளை ஏனோ, தானோவென்று நினைக்கக் கூடாது. கண்ட இடத்தில் வைக்க கூடாது. பத்திரமாக வைத்துத் தினமும் படிக்க வேண்டும்.

உங்களுக்கான சில கேள்வி களை கீழே கொடுக்கிறேன். பதிலை கண்டுபிடித்து மனப்பாடம் செய்யுங்கள்.

1. வேதாகமம் என்பதின் பொருள் என்ன?
2. வேதாகமத்தின் விசேஷித்த செய்தி என்ன?
3. வேதாகமத்தின் முக்கிய பிரிவுகள் எத்தனை? ஒவ்வொன்றிலும் எத்தனை புத்தகங்கள்?
4. வேதாகமம் யாருக்கு எழுதப் பட்டது?

குட்டீஸ், உங்களுக்கு வேதாகமம் பற்றி ஒரு சின்ன பாடல் சொல்லுகிறேன். படியுங்கள்.

" The BIBLE
Yes, that's the book for me
I Stand upon the word of god
The Bible "

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. J.H. James Rajakumar**

அன்பானவர்களே!

**திரு**மறை ஆசான் பத்திரிக்கை வாயிலாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். எல்லாம் வல்ல பரலோகத்தின் தேவன் உங்களை சுக பத்திரமாய் காப்பாற்றி போஷிக்கிறார் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

சென்ற மாதத்தில் அப்போஸ்தலராகிய பவுலினுடைய நிருபங்களிலிருந்து நாம் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாக விசுவாசித்து கிறிஸ்துவின் உபதேசத்தை கைக்கொண்டு வாழ வேண்டும் என்றும், பழைய ஏற்பாடு இக்காலத்தில் வாழுகிற நம்மை தேவனிடம் சேர்க்க உகந்தது அல்ல என்பதையும் அநேக வசன ஆதாரங்களுடன் கவனித்தோம். நிறைவாக எபிரெயர் நிருபத்தின் முதல் இரண்டு வசனங்களையும், அதன் பொருளை அறியும்படி இயேசுவானவர் மறுரூபமான நிகழ்ச்சியின் அறிவுரைகளையும் கவனித்தோம்.

இப்பொழுது எபிரெயர் புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் பரிசுத்த ஆவியானவர் மனுக்குலமாகிய நமக்கு அறிவுறுத்துகிற அல்லது நம்மிடம் எதிர் பார்க்கிற நம்பிக்கையை பற்றி கவனிப்பது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு வசனங்களாக நாம் விளக்கிக் கொண்டிருப்பது கால நேர விரயத்தை ஏற்படுத்தும் என்று எண்ணுகிறேன்.

முதல் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை விட்டு கிறிஸ்துவை மேலானவராக வலியுறுத்திக் காட்டின பரிசுத்த ஆவியானவர் தேவ தூதர்கள் பக்கமாக வருகிறார். தேவ தூதர்கள் மூலமாக தேவன் தம் செய்தியை வெவ்வேறு சூழ்நிலைகள் மனிதருக்குக் கொடுத்ததினாலே தேவ தூதரை கிறிஸ்துவை விட பெரியவர்களாக எண்ணாதபடிக்கு தேவதூதர்களை தேவனுக்குச் சமமாக எண்ணி ஆராதிக்காதபடிக்கு (கொலோ. 2:19). கிறிஸ்துவையே மேன்மையாக நாம் எண்ணிக் கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தில் இந்த முதலாம் அதிகாரத்தில் அநேக கருத்துக்களை சுருக்கமாக எழுதியிருக்கிறார். இதில் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் கருத்து என்னவென்றால், தேவ தூதர்கள் என்பவர்கள் ஊழியர்கள் அல்லது சேவகர்கள் (பணி விடை ஆவிகள்). ஆனால், கிறிஸ்துவோ இணை சிருஷ்டிகராகவும், தேவனுடைய குமாரராகவும், தேவனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவராகவும், நீதியுள்ள செங்கோலையுடைய ராஜாவாகவும், தேவதூதர்களால் தொழுது கொள்ளப்படதக்கவராகவும் இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்தி வேலைக்காரரை அல்ல சுதந்தரவாளியாகிய கிறிஸ்துவையும் அவர் போதித்த சத்தியத்தை மாத்திரமே நாம் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

இரண்டாம் அதிகாரத்தில், தேவதூதரிலும் சற்று சிறிய பிறவியாகிய மனித பிறவியை ஆண்டவராகிய இயேசுவானவர் எடுத்திருந்தாலும் இப்பிறவியின் மூலமாகத்தான் நீதியுள்ள மரணமடைந்து சாத்தானை ஜெயித்து சுவிசேஷத்தை ஸ்தாபித்து ஆவிக்குரிய மரணத்தில் இருந்தவர்களுக்கு நித்திய விடுதலையை ஏற்படுத்தினார். இதற்குரிய வசனங்களை கர்த்தர் அறிவித்து அப்போஸ்தலர்கள் மூலமாக அதை உறுதிப்படுத்தி இரட்சிப்பின் திட்டத்தை உருவாக்கினார். தேவ தூதர்கள் மூலமாக சொல்லப்பட்ட வசனத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு உடனே தண்டனை வந்தது. ஆனால், கிறிஸ்துவின் மூலமாக சொல்லப்பட்ட இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு தண்டனையிலிருந்து தப்பிக்க வழியில்லை என்று சொல்லுகிறார். இந்த அதிகாரத்தில் தேவதூதர்களை விட கிறிஸ்து இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறார் என்று வலியுறுத்தப்படுகிறது.

மூன்றாம் அதிகாரத்தின் முற்பகுதியை மிகவும் சுருக்கமாக கருத்தாக்கம் செய்ய முடியும். அது என்னவென்றால், " மோசேயை விட கிறிஸ்து பெரியவர் " மோசே தேவனுடைய வீட்டில் வேலை செய்த பணிவிடைக்காரராய் இருந்தார். ஆனால், கிறிஸ்துவோ அந்த வீட்டின் சொந்தக்காரராக இருக்கிறார். வேலை செய்தவருக்கு செவி கொடுப்பதைவிட வீட்டின் முதலாளிக்கு செவி கொடுக்க வேண்டும். மேலும், மூன்றாம் அதிகாரத்தின் மையப் பகுதியில் இந்த செய்தியைக் கேட்டுக் கீழ்படியும்படி வலியுறுத்துகிறார்.

மூன்றாம் அதிகாரத்தின் முற்பகுதியிலும் 4ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களிலும் இளைப்பாறுதலைக் குறித்து விவாதிக்கிறார். இங்கே சங்கீதம் 95ஐ பயன்படுத்தி இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய இளைப்பாறுதலைப் பெற வில்லை அப்படி அவர்கள் பெற்றிருந்தால் இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிக்க வில்லை என்று மோசேக்கு பிறகு சுமார் 500 வருடங்களுக்கு பின் வாழ்ந்த தாவீது தன்னுடைய தீர்க்கதரிசனமாக சொல்லியிருக்கமாட்டார். ஆகவே, 4ம் அதிகாரம் வலியுறுத்துவது என்னவென்றால், யோசுவா இளைப்பாறுதலைப் பெற்றுத்தர வில்லை. கிறிஸ்துவே மெய்யான இளைப்பாறுதலை நமக்கு அளிக்கிறவராயிருக் கிறார். ஆகவே, இளைப்பாறுதலைத் தராத காலத்தின் உடன்படிக்கையை நாம் கடைபிடிக்க வேண்டுமா அல்லது நித்திய இளைப்பாறுதலை நமக்கு உறுதி செய்துள்ள கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையை நாம் கைகொள்ள வேண்டுமா என்பதை உறுதி செய்ய இதுவே சரியான தருணம். நாம் இந்த இளைப்பாறுதலை இழந்து விடக்கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் நம்மை எச்சரிக்கிறார்.

மேலும், எபி. 4:14,16 வசனங்களில் நம்முடைய விசுவாசத்தை ஒழுங்கு படுத்துகிறார். எப்படியென்றால், நாம் பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவை களை நாட நம்மை உற்சாகப்படுத்துகிறார். (கொலோ. 3:1,4) ஏனென்றால், நாம் அப்படிப்பட்ட இரட்சிப்பின் திட்டத்தை பெற்றிருக்கிறோம். நான் ஏற்கனவே குறிப்பிட்டதை மீண்டும் கவனிக்கும்போது, இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தது. ஆகையால், அவர்கள் பரலோகத்தைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. ஆனால், கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச் சென்று விசுவாசத்தை துவக்கினதால் நாம் இன்றைய காலத்தில் பரலோகத்தைப் பற்றி அறிந்துள்ளோம். ஆகவே, நம்முடைய

விண்ணப்பங்கள் நாம் அறிக்கை செய்கிற பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய கிருபாசனத்தை சென்றடையக் கூடியதாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் போடப்பட்ட தூபவர்க்கம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தது போல நம்முடைய ஜெபங்கள் மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்திலே சென்றடையக் கூடியதாயிருக்கிறது. ஆகையால், பழைய ஏற்பாட்டிலும் சாலமோன் தான் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டை செய்த நாளில் பரலோகத்திலிருக்கிற பிதாவை நோக்கி ஜெபித்தார். பழைய ஏற்பாட்டின் காலத்திலே வாழ்ந்த தீர்க்கதரிசியாகிய ஏசாயாவும் 66:1,2ல் வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படி என்று கர்த்தர் சொன்னதாக சொல்லியிருக்கிறார். ஆனால், இன்றைக்கு ஜெபங்கள் தேவனுடைய பாதப்படியில் வைத்து ஜெபிக்கிற முறையை நாம் கண்கூடாகக் காண்கிறோம் கேட்கிறோம். வேதாகமம் முழுவதும் தேடினாலும் விண்ணப்பத்தை தேவனுடைய பாதபடியில் வைத்து ஜெபித்தார்கள் என்கிற சத்தியத்தை நம்மால் காணமுடியாது. கிறிஸ்துவானவர் இந்த உலகத்திலே மனிதராக வாழ்ந்த காலத்தில் அவர் பாதத்தில் அமர்ந்து சத்தியம் கேட்டார்கள். ஆனால், இயேசுவே தம்முடைய ஊழியத்தின் இறுதி நாட்களில் யோவான் 16:23ல் நீங்கள் இனிமேல் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள். என்னுடைய நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேளுங்கள் என்கிற புதிய முறையை சொல்லிக் கொடுத்தார்.

கிறிஸ்துவானவர் சொல்லிக் கொடுத்த மாதிரி ஜெபத்திலும் கூட பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று கூப்பிடும்படிதான் சொல்லிக் கொடுத்தார். இயேசுவிடம் ஜெபிப்பதைப் பற்றி இப்பொழுது நாம் ஆராயவில்லை. பாதத்தில் ஜெபிப்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் (எபி. 4:14,16) வசனங்கள் பரலோகத்திலே தேவனுடைய கிருபாசனத்தண்டை " வானம் எனக்குச் சிங்காசனம் (ஏசா. 66:1; அப். 7:49; 1 இராஜ. 8:27,30,34,39,43, 45,49) என்று பரலோகத்தை நோக்கி நாம் ஜெபிக்க வேதாகமம் நம்மை வலியுறுத்துகிறது. சாலமோன் ராஜாவும் கூட 1 இராஜா 8:22ல் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஜெபித்தார் என்று நாம் பார்க்கிறோம். தேவனுடைய பாதத்திலே நம்முடைய ஜெபத்தை வைத்தால் மேற்கண்ட வசனங்களின்படி நம்முடைய ஜெபம் பரலோகத்திலே தேவனுடைய சிங்காசனத்தண்டையிலே சேராமல் பூமியிலே ( "பூமி எனக்கு பாதபடி " ஏசா. 66:1) இருக்கிறது என்று தான் நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். பாதத்திலே காணிக்கையை வைப்பது வேறு மதத்தவரின் நம்பிக்கை பூமியிலிருந்த தேவாலயத்தை பார்த்து ஜெபிப்பது யூதர்களின் அல்லது இஸ்ரவேலர்களின் நம்பிக்கை. ஆனால், கிறிஸ்தவர்களின் நம்பிக்கை பரலோகம் நாம் செல்லப் போகிற இடம் நமக்கு முன்னே கிறிஸ்து போயிருக்கிறார். ஆகையால், நமது நம்பிக்கை, எண்ணங்கள் மட்டுமல்ல, நமது விண்ணப்பமும் அங்கேதான் சேர வேண்டும். (பிலிப். 3:20) சகோதரர்களை குற்றப்படுத்த வேண்டும் என்பது நம்முடைய எண்ணம் அல்ல. வேதத்தின்படி நம்முடைய எல்லா செயல்பாடுகளும் இருக்க வேண்டும். நம்பிக்கையும், விசுவாசமும் இருக்க வேண்டும் என்பதற்காக விளக்கம் தேவையாயிற்று. வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதைச் செய்தாலும் அதையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்து என்று பரிசுத்த ஆவியானவர்

நம்மை வழிநடத்துகிறார். கிறிஸ்து எங்காவது தேவனுடைய பாதத்திலே வார்த்தைகளை வைத்து ஜெபித்தாரா? அல்லது பரிசுத்தவான்கள் அப்படி ஜெபித்தார்களா? என்று ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யலாம். ஒரு உபதேசம் அல்லது முறை தேவனால் உண்டாயிருந்தால் அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். (யோவான் 7:16,17) அல்லது மனிதனால் உண்டாயிருந்தால் அவற்றை புறம்பே தள்ளுவது நலம்.

எபிரெயர் 5ம் அதிகாரம் ஆசாரியத்துவத்தைப் பற்றி பேசுகிறது. நியாயப் பிரமாணம் ஆரோன் என்கிற மனிதனை பிரதான ஆசாரியனாகக் கொண்டிருந்தது. ஆனால், கிறிஸ்துவே மெல்கிசேதேக்கின் முறைமையின்படி புதிய உடன்படிக்கைக்கு ஆசாரியராயிருக்கிறார். ஆகையால், நாம் இன்றைக்கு ஒரு முடிவு செய்ய வேண்டும். ஆரோனுடைய பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவமா, புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் தெய்வீகமான பிரதான ஆசாரியத்துவமா இந்த இரண்டில் ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டையும் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. தேவனுடைய சட்டம் அப்படிச் சொல்லுகிறது. ஆகையால், குழந்தைகளாயிராமல் வளருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார். அப்படி வளரவிட்டால் 6ம் அதிகாரத்தின் முற்பகுதியில் சொல்லப்பட்டபடி கனி கொடுக்காத அதாவது பலன் கொடுக்காத நிலத்தைப் போல இருப்போம்.

எபி. 6ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் நம்பிக்கையைப் பற்றி பேசுகிறார். அதோடு ஆணையைப் பற்றி பேசுகிறார். பொய்யுரையாத தேவன் கிறிஸ்துவின் மூலமாக நமக்கு கொடுத்த ஆணையை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். ஏனென்றால், தேவனுடைய நம்பிக்கையை நமக்கு தெரிவிக்கும் விதமாக கிறிஸ்து மாம்சம் என்னும் திரையின் வழியாகப் பரலோகம் சென்று ஆணையை உறுதிப் படுத்தியதோடு நம்மை பரலோகம் கொண்டு செல்லும் வழியையும் உண்டாக்கினார். ஆகையால், பழைய ஏற்பாட்டு காலத்தின் நம்பிக்கையை ஆணையைவிட கிறிஸ்துவின் மூலமாக தேவன் கொடுத்த ஆணை நம்பிக்கை பெரியதாயிருக்கிறது.

எபி. 7ம் அதிகாரத்தில் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டு புதிய ஆசாரியத் துவமும், நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டு புதிய பிரமாணமும் அதற்குரிய நடைமுறைகள் எல்லாம் மாறிப்போனதாக உறுதிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவை நம்புகிற கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பழைய ஏற்பாட்டையும் அங்கீகரித்து அதற்கும் பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று சொன்னால், பெரிய பாவம் செய்கிறவர்களாயிருப்போம். ஏனென்றால், கிறிஸ்து யூதா கோத்திரத்தில் பிறந்தவராவார். ஆகையால், அவரை நியாயப்பிரமாணத்திற்கு ஆசாரியராயிருக்கும்படி சொல்ல நமக்கு என்ன உரிமை இருக்கிறது. அப்படி இயேசுவானவர் நியாயப் பிரமாணத்தின் கீழே ஆசாரியராக செயல்பட்டால் அது தேவனுக்கு விரோதமாக அவருடைய சட்டத்தையே மீறுவது ஆகும். அது பாவமும் ஆகும். (1 சாமு. 13:11,13; 2 நாளா. 26:16,21) நியாயப்பிரமாணம் பெலவீனம் சம்பந்தமான கட்டளை பெலவீனமான ஆசாரியர்களைக் கொண்டிருந்தது. ஆனால், கிறிஸ்துவோ

ஜீவனுக்குரிய பிரமாணத்திற்கு ஆசாரியராக இருக்கிறார். அவர்கள் மரணத்தினிமித்தம் மாறிப் போனார்கள். ஆனால், கிறிஸ்துவோ மாறாத ஆசாரியராயிருக்கிறார். அவர்கள் அநேக பலிகளை செலுத்தினார்கள். கிறிஸ்துவோ நீதியுள்ள பரிபூரணமான ஒரேயொரு பலியைத் தேவனுடைய சமூகத்தில் செலுத்தினார்.

எபி. 8ம் அதிகாரம் ஏற்கனவே விளக்கப்பட்டது என நினைக்கிறேன். இங்கே பரிசுத்த ஆவியானவர் தீர்க்கமாக ஒரு கருத்தை சொல்லுகிறார். பழைய ஏற்பாடு அமலில் இருக்கும்போதே தேவன் புதிய ஏற்பாட்டிற்கு (உடன்படிக்கைக்கு) வழிவகுத்துவிட்டார் (எரே. 31:31,33). அந்த பிரமாணமும் பெலவீனமானது. அதை கைகொண்ட மக்களும் அதை மீறி மீறி அதை பிழையாக்கிப் போட்டபடியால் இன்னொரு உடன்படிக்கையை அதாவது கிறிஸ்துவின் மூலமாக புதிய உடன்படிக்கையை கொண்டு வர வேண்டியது அவசியமாயிற்று என்று சொல்லி பழைமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது என்று கி.பி. 64,கி.பி. 68ல் எழுதுகிறார். இதன்படி கி.பி. 70ல் தீத்து ராயன் எருசலேமையும் தேவாலயத்தையும், மதிலையும் இடித்து தீக்கொளுத்தி கிறிஸ்து சொன்னபடி ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி செய்து விட்டனர். (மத். 24:2). அப்பொழுது முதல் பழைய ஏற்பாட்டு பலி ஆராதனை நிறுத்தப்பட்டது. இந்நாள் வரை அப்படியே இருக்கிறது. மீண்டும் தியானிப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## நாளும், நடப்பும்

1. ஆந்திர மாநிலத்தைப் பிரிக்கும் விவகாரம் விசுவரூபம் எடுத்து வருகிறது.
2. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு
3. ஆதார் அட்டை அத்தியாவசியமில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு
4. பல்வேறு துறைகளுக்கான "நோபல் பரிசு" அறிவிப்பு
5. சச்சின் டெண்டுல்கர் 200வது டெஸ்ட் உடன் ஓய்வு பெறப்போவதாக அறிவிப்பு
6. கால் நூற்றாண்டுக்குப் பிறகு இலங்கை வடகிழக்கு மாகாணத்திற்கு புதிய முதலமைச்சர் பதவியேற்பு

# பாடம்-35. மரித்தவர்கள் பற்றிய சரியான மனோ நோக்கு

Bro. K. பாஸ்கர்

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தினாலே வாழ்த்துக்கள்.

மரித்தவர்களைப் பற்றி நிறைய தவறானக்கருத்துகள் (கதைகள்) அனைத்து மக்களிடமும் இருக்கின்றது. நாம் அவர்களைக் குறித்து சரியான மனோ நோக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு தேவன் கொடுத்திருக்கும் பரிசுத்த வேதாகமம் உதவி செய்கின்றது. ஆகவே, இந்த மாதத்தில் மரித்தவர்கள் பற்றிய சரியான நோக்கு என்ற பாடத்தை வேதத்திலிருந்து அறிந்து கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபைக்கு மனந்திரும்பி குணப்படுவோமாக.

## I. *மரித்தவர்களுக்கு ஏழு பிறவி என்பது இல்லை*

மனிதனுக்கு ஏழு பிறவி அல்லது ஏழு ஜென்மம் இருப்பதாக அநேகர் நம்புகின்றனர். அதாவது, இந்தப் பிறவியில் நன்மைகளைச் செய்து நல்லவராக வாழ்ந்தால் அவன் மரித்து அடுத்த பிறவியில் மனிதனாகப் பிறப்பான் என்றும் கெட்ட செய்கைகளைச் செய்து கெட்டவனாக வாழ்ந்தால் அவன் மரணத்திற்குப் பின்பு ஏதோ ஒரு மிருகமாகப் பிறப்பான் என்றும் நம்புகின்றனர். இப்படியே மனிதனுக்கு ஏழு பிறவி இருப்பதாக நினைக்கின்றனர். ஆனால், பரிசுத்த வேதாகமத்தில் அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது (எபி. 9:27) அதாவது, மரித்தவர்களுக்கு ஏழு பிறவியோ, ஏழு ஜென்மமோ கிடையாது. ஒரு முறைதான் மனித வாழ்க்கை. மரணத்திற்கு பின்பு நியாயத்தீர்ப்பு தான். தேவன் எல்லா மனிதர்களுக்கும் நியமித்திருக்கிறார். ஆகவே, இந்த ஒரு முறை கொடுக்கப் பட்ட மனித வாழ்க்கையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவ கிரீடமாகிய நித்திய வாழ்வைக் கொடுப்பார் (வெளி. 2:10) இல்லையென்றால் பாவத்தின் சம்பளம் மரணம். அதாவது நித்திய நரகம் தான் கிடைக்கும் (ரோம. 6:23).

மரித்தவர்களைக் குறித்து ஞானி சாலமோன் எழுதும்பொழுது உயிரோடி ருக்கிறவர் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை. அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை என்று எழுதுகிறார் (பிர. 9:5,6). அதாவது, மனிதன் மரித்தால் அவ்வளவுதான் அவனுடைய அத்தியாயம் எல்லாம் முடிந்து விட்டது. இன்னொரு பிறவி என்பது இல்லை. எல்லாம் ஒழிந்து போயிற்று இனி

அவர்களுக்கு உலக வாழ்க்கையில் ஒரு பங்குமில்லை. ஆகவே, ஏழு பிறவி என்ற மூடநம்பிக்கையை விட்டு தேவனிடம் மனந்திரும்பி மரித்தவர்கள் குறித்த சரியான மனோ நோக்கு உடையவர்களாக இருக்க தேவன் வழி நடத்துவாராக.

## II. மரித்தவர்கள் ஜெபிக்கத் திராணியற்றவர்களாக இருக்கிறார்கள்

மரித்தவர்கள் பற்றிய சரியான மனோ நோக்கு உடையவர்களாயிருக்க அவர்கள் தேவனிடம் ஜெபிக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ரோமக் கத்தோலிக்கர்கள் மரித்தவர்களிடத்தில் ஜெபிக்கும் முறையைக் கடைபிடித்து வருகின்றனர். மரித்துப் போன மரியாளிடத்தில் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்றும், மரித்துப்போன சூசையப்பரிடம் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்றும், மரித்துப்போன அப்போஸ்தலர்களிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்றும் முறையிடு கின்றனர். மரித்தவர்கள் குறித்து வேதவசனம் மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள் என்று தெளிவாய்ச் சொல்லு கின்றது (சங். 115:17). உயிரோடிருக்கிறவர் தான் தேவனை துதிக்க முடியும், ஜெபிக்க முடியும். மரித்தவர்கள் ஜெபிக்க திராணியற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மவுனமாகி விடுகின்றனர் பேசும்படிக்கு சக்தி, உயிர் இல்லை. அவர்கள் ஆத்துமா இளைப்பாறுகின்றது, நித்திரையாயிருக்கின்றது (1 சாமு. 28:15).

மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறும்பொழுது தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்று சொல்லுகிறார். (மத். 22:32) இப்படி வேத வசனங்கள் மரித்தவர்கள் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லுகிறபடியால் மரித்தவர்களிடத்தில் விண்ணப்பம் பண்ணு வதும், ஜெபிப்பதும் மூடத்தனமாக இருக்கிறது. மரித்துப்போன மரியாளோ, மரித்துப்போன சூசையப்பரோ அல்லது மரித்த அப்போஸ்தலர்களோ நமக்கு மத்தியஸ்தர்கள் அல்ல. தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. அவர்தான் இயேசுகிறிஸ்து என்று வேத வசனம் கூறுகின்றது (1 தீமோ. 2:5,6). ஆகவே, நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபித்து அவர்கள் மூலமாக தேவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து இயேசு கிறிஸ்து கூறும்பொழுது நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரினில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று வாக்குரைத்திருக்கிறார். (யோவான் 14:13,14) அவராலே மட்டும் தான் தேவனிடத்திலிருந்து பெற்றுத்தர முடியும். ஏனென்றால், அவர் ஒருவரே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்றும் ஜீவிக்கிற கர்த்தராக இருக்கின்றார். வேறு யாரும் உயிர்த்தெழவில்லை. ஆகவே நம் விண்ணப்பங்கள், ஜெபங்கள் எல்லாம் மரித்துப்போன மனிதர்களிடத்தில் ஏறெடுக்காமல் ஜீவனுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனிடம் தெரிவிப்போம். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் தேவ சமாதானம் நிலைத்திருக்கும் (பிலி. 4:6,7).

## III. மரித்தவர்கள் குறி சொல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள்

மரித்தவர்கள் பற்றிய சரியான மனோ நோக்கு நாம் அடைந்திட அவர்கள் குறி கொல்ல முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், வேதாகமத்தை வைத்துக் கொண்டு சிலர் செத்தவனிடத்தில் குறி கேட்பதும், அவர்களிடத்தில் பேசுவதும் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இது ஆவிகளிடம் பேசுதல் என்கிறார்கள். ஆனால், வேத வசனத்தில் மந்திரவாதியும், சன்னைக்காரனும், மாய வித்தைக்காரனும், செத்த வனிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் என்று கடுமையாகச் சொல்லுகின்றது (உபா. 18:11,12) மேலும், கர்த்தர் எசேக்கியல் தீர்க்கதரிசி மூலமாய் இஸ்ரவேலைக் குறித்து சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது, தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகொட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ! கர்த்தர் அனுப்பாதிருந்தும் கர்த்தர் உரைத்தரென்று சொல்லி அவர்கள் அபத்தத்தையும், பொய்க் குறியையும் தரிசித்து காரியத்தை நிர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள். இதோ நான் உங்களுக்கு விரோதமானவர் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே. 13:3,9). ஆகவே, குறி சொல்வது எல்லாம் பொய் என்று தேவன் சொல்லுகிறார். குறி சொல்லுகிறவர்கள் யாவரும் கொலை செய்யப்படக்கடவர்கள் (லேவி. 20:27) என்றும் தேவன் எச்சரித்துள்ளார். உயிரோடிக்கிறவர்களே குறி சொல்வதை எச்சரிக்கப்பட்டுள்ளனர். மரித்தவர்கள் எப்படி குறி சொல்ல முடியும்!.

மரித்தவர்கள் பூமியில் நடக்கும் காரியங்களை ஒன்றும் அறிவதில்லை என்று வேத வசனம் கூறுகின்றது (பிர. 9:5,6). அவர்கள் மவுனமாகிவிடுகின்றனர் (சங். 115:17). உதாரணமாக, லாசரு, ஐசுவரியவான் உவமையில் ஐசுவரியவான் மரித்து பாதாளத்தில் வேதனைப்படும்போது தனக்கு ஐந்து சகோதரர்கள் இருக்கிறார்கள் அவர்கள் இந்த வேதனையுள்ள இடத்திற்கு வராமலிருக்க மரித்த லாசருவை அனுப்பி பேசும்படி ஐசுவரியவான் கேட்டதற்கு அதற்கு ஆபிரகாம் மறுப்புத் தெரிவித்துவிட்டார் (லூக். 16:27,31). ஆகவே, மரித்தவர்கள் உயிரோடி ருப்பவரிடத்தில் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை. அவர்கள் குறி சொல்லுகிறார்கள் என்பது எல்லாம் பொய்யாயிருக்கிறது. இப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டிருப்பது அறிவீனமாக உள்ளது. நாமோ ஞானமுள்ளவர்களாக நடந்து கொள்ளுவோமாக!

## IV. மரித்தவர்கள் உத்தரிப்பு என்னும் ஸ்தலத்திற்குப் போவதில்லை

மரித்தவர்கள் பற்றிய சரியான மனோநோக்கு நமக்கு இருக்க வேண்டும். அவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்கு போவதில்லை என்ற எண்ணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ரோமக் கத்தோலிக்க மக்கள் மரித்தவர்கள் மரணத்திற்குப் பின்பு அவர் களுடைய ஆத்துமாவானது நியாயத்தீர்ப்பு நாள்வரை உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் சென்று அங்கே காக்கப்படுகிறது என்று நம்புகின்றனர். அந்த உத்தரிப்பு ஸ்தலம் எங்கு இருக்கிறது என்று கேட்டால் அதற்கு பதில் இல்லை. அது எங்கு இருக்கிறது

என்று பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இல்லை. வேதத்தில் இல்லாததைக் குறித்து ஏன் நம்ப வேண்டும்? அவர்கள் மனித கற்பனைகளுக்கு இடம் கொடுத்து நம்புகின்றனர்.

அந்த உத்தரிப்பு ஸ்தலம் குறித்து அவர் போதிப்பது அற்ப பாவம் செய்து மரித்தவர்களுடைய ஆத்துமா அங்கே சென்று வேதனை அடைகிறது. அந்த வேதனைகளைக் குறைப்பதற்காக ஒவ்வொரு வருடமும் நவம்பர் இரண்டாம் தேதி கல்லறைத் திருநாள் கொண்டாடப்படுகிறது. அந்த நாளிலே மரித்த ஆத்துமாக் களுக்கு மோட்ச விளக்கு ஏற்றி வைத்து திருப்பலி, தானதர்மம் செய்வார்கள். இப்படியே ஒவ்வொரு வருடமும் நவம்பர் இரண்டாம் தேதி கல்லறைத் திருநாள் செய்து மரித்த ஆத்துமாக்களுடைய வேதனைகள் குறைக்கப்பட்டு இறுதியில் அவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து பரலோகம் போவார்கள் என்று போதிக்கின் றனர். ஆனால் இது பற்றி பரிசுத்த வேதாகமத்தில் இல்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லாசரு, ஐசுவரியவான் உவமையில் மரித்தவர்களுக்கு இரண்டு இடங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஒன்று பரதீசு, ஆறுதலடையும் இடம். இன்னொன்று, பாதாளம் வேதனைகள் இருக்கும் இடம் (லூக். 16:22,24) மற்றபடி உத்தரிப்பு ஸ்தலம் இருப்பதாகச் சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொண்டு இப்படிப்பட்ட மூடப் பழக்கத்திலிருந்து விடுதலை அடைவோமாக!

### V. *மரித்தவர்கள் இரண்டாவது வாய்ப்பைப் பெறுவதில்லை*

மரித்தவர்களைக் குறித்து சரியான மனோநோக்கு நாம் பெற்றிட கடைசியாக அவர்கள் இரட்சிப்புக்கு இரண்டாவது வாய்ப்பைப் பெறுவதில்லை என்று பார்ப்போம். இரட்சிப்பைப் பெறாமல் மரித்து விட்டால் அவர்களுக்கு மரணத் திற்கு பின்பு இரட்சிப்பு பெற இரண்டாவது வாய்ப்பு உள்ளதாக சிலர் போதிக் கின்றனர். இப்படிப்பட்டவர்கள் சொல்லும் வசனமானது (1 பேதுரு 3:18,20). இதில் உள்ள வசனத்தை தவறாக எண்ணியிருக்கிறார்கள். அதவாது, மாம்சத்தில் இயேசு கிறிஸ்து பாடுபட்டு, கொலையுண்டார். ஆவியிலே அவர் போய் பாதாளத் திற்கு போய் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள் பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களில் இருந்த கீழ்ப்படி யாதவைகள் என்று எண்ணுகிறார்கள். நாம் வேதத்தை ஆராயாமல் இந்த வசனத்தை மட்டும் படித்தால் அவர்கள் சொல்லுவது போலத்தான் இருக்கும். நாம் வேதத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் (யோவான் 5:39).

புதிய ஏற்பாட்டிலிருந்து தான் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் படிக்க முடியும் என்பதல்ல அவர் பழைய ஏற்பாட்டிலிருந்தே இருக்கின்றார். அவர் ஆவியிலே தேவனோடு, வார்த்தையாக இருந்தார். (யோவான் 1:1,3) முதல் பிரசங்கியார் நோவாவோடு கிறிஸ்து இருந்தார். நோவா கிறிஸ்துவின் ஆவியைப் பெற்று பிரசங்கித்தார். மற்றபடி கிறிஸ்து பாதாளத்திற்கு சென்று வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்கு பிரசங்கிக்கவில்லை. அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு தேவன் நியமித்திருக்கிறார். இரண்டாவது வாய்ப்பு இல்லை. ஒரே ஒரு வாய்ப்பு. உயிரோடு இருக்கிறவர்களுக்கு இன்றே இரட்சண்ய நாள் (2 கொரி. 6:2). நாளை என்பதல்ல (யாக். 4:14)

(தொடரும்)

# மந்தையைக் கண்காணித்தல்

## Overseeing the Flock

### *Jerry Jenkins*

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களை சந்தித்த போது அவர்களுக்கு இவ்விதமாகப் புத்திமதி சொன்னார். " ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்கணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கை யாயிருங்கள் " (அப். 20:28).

மூப்பர்களை நான் எப்போதுமே மதிப்பதுண்டு, வழக்கமாக அவர்கள் உதவிப் பெற்றுக்கொண்டு சேவைச் செய்வதில்லை, அதே நேரத்தில் பெரும்பாலும் அவர்கள் பாராட்டப்படுவதுமில்லை. மூப்பர்களால் தாங்கள் தவறாக நடத்தப்பட்டதாக சில பிரசங்கியார்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் எந்தெந்த மூப்பர்களிடமெல்லாம் சேவை செய்திருக் கிறேனோ, அவர்களெல்லாரும் என்னிடம் நியாயமாகவும், எனக்கு ஆதர வாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட தர்ம சங்கடமான நிலையைக் குறித்து கடும் வேதனை அடைவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் என்னவெல்லாம், எப்போதெல்லாம் முடிவெடுக் கிறார்களோ அது மற்றவர்களுக்கு காயத்தையும், கெட்ட எண்ணத்தையும் ஏற்படுத்தும்.

மூப்பர்கள் சபையைக் காண்காணிக்கும் போது எண்ணற்ற காரணிகள் நினைவில் வைக்கப்பட வேண்டும்.

### 1. கண்காணிப்பு சர்வதிகாரமுடையதாக இருக்கக்கூடாது

சபை என்னும் கழகத்தில் மூப்பர்கள் இயக்குநர்களின் ஒரு குழுவாக இருக்கக்கூடாது, ஊழியர்களுடைய குடும்பத்தின் சிறந்த முன்னுதாரண முள்ள தலைவர்களாக இருக்கிறார்கள். மூப்பர்கள் அலுவல் கூட்டங்களில் எந்த அளவு நேரத்தைச் செலவு செய்கிறார்களோ அதுவே அவர்கள் தாழ்மை யான வேலைக்காரர்களாக இராமல் அதிகாரிகளாக இருக்க விரும்புவதை காட்டிக் கொடுக்கிறது. புண்படுத்திவிட்டு அல்லது வழிதப்பிச் செல்கிற சபை அங்கத்தினர்களிடம் ஒரு மேலாளரைப் போல் மூப்பர்கள் நடந்து கொண்டால் அவர்கள் எச்சரிக்கப்பட வேண்டும்.

## 2. கண்காணிப்பை மூப்பர்கள் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்; இது பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது, ஒருமையில் அல்ல

மூப்பர்கள் செலுத்தும் அதிகாரம் ஒரு மூப்பர் ஒரு குறிப்பிட்ட பணியை பார்த்துக் கொள்ளும்படி பிரதிநிதிப்படுத்தப்பட்டாலொழிய மூப்பர்கள் பன்மையில் தான் அதிகாரத்தை செலுத்த வேண்டும். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் ஒரு மூப்பன் தனியாக அதிகாரத்தைச் செலுத்தக் கூடாது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பிராந்திய சபையில் இரண்டு மூப்பர்கள் இருக்கும்போது, ஒருவர் இறந்து விட்டால் மற்றொருவர் ராஜினாமா செய்து விட வேண்டும், ஏனென்றால், தேவன் தம்முடைய சபையை கண்காணிக்க ஒருபோதும் ஒரு மனிதனை ஒழுங்கு படுத்தவில்லை.

சபை அங்கத்தினர்கள், சில கேள்விகள் கேட்டு தேவ பக்தியுள்ள மூப்பன் ஒருவர் அதற்கு பதிலளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி அவரை ஓரம் கட்டுவதனால் அவர் தன்னுடைய எல்லையைத் தாண்டாமல் இருக்க உதவிச் செய்ய முடியும். அங்கத்தினர்கள் சில அனுகூலமான செல்வாக்கைப் பெற்றுக் கொள்வதற்காக மூப்பரின் நட்பைப் பெற முயற்சிப்பதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குப் புறம்பான இத்தகைய செயல் பாடுகளெல்லாம் ஒவ்வொரு தேவ பக்தியுள்ள மூப்பனும் நான் எந்த ஒரு கேள்விக்கும் பதில் அளிப்பதற்கு முன்பாக சக மூப்பர்களின் முடிவுக்காக காத்திருக்கும்போது நின்று விடும்.

## 3. மூப்பர்கள் தங்களுக்குத் தாமே அல்ல மந்தையை கண்காணிக்க வேண்டும்

நான் இப்படிச் சொல்வதன் பொருள் மூப்பர்கள் எப்போதுமே தங்கள் இருதயங்களில் மந்தையைக் குறித்த நலனை வைத்திருக்க வேண்டும். பிரச்சனைகள் அதிகமாக ஏற்படும்போது செயல்படுவதற்கு சுலபமான வழி பெருமளவில் பலரை ஐக்கியத்தை விட்டு நீக்குவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள், சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்காகவும் இயேசு மரித்தார் என்பதையும், ஒரு ஆத்துமா பரலோகம் போவதற்கு உதவிச் செய்ய அதற்காக எந்த முயற்சி எடுத்தாலும் அது தகும் என்பதை அறிந்திருக் கிறார்கள். அங்கத்தினர்களை ஒழுங்குபடுத்துவதற்கு மூப்பர்களுக்கு சுலப மான வழி சீர்திருத்தக் கடிதம் எழுதுவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள் தனிப்பட்ட முறையில், முகமுகமாக அவர்களுக்குப் போதிப்பதை விட சிறந்த தகவல் தொடர்பு சாதனம் இல்லை என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

நீண்ட காலத்திற்கு முன்பு எசேக்கியல் இஸ்ரவேலின் மேய்ப்பர் களுக்கு அறிவுரை வழங்கினார். அது இன்றும் தேவனுடைய ஆவிக்குரிய மந்தையின் மேய்ப்பர்களுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

நீண்ட காலத்திற்கு முன்பு எசேக்கியல் இஸ்ரவேலின் மேய்ப்பர்களுக்கு அறிவுரை வழங்கினார். அது இன்றும் தேவனுடைய ஆவிக்குரிய மந்தையின் மேய்ப்பர்களுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

" கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்; மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்; கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்கிறார்; தங்களாலே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும். நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு ஆட்டு மயிரை உடுப்பாக்கிக் கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமற் போகிறீர்கள். நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசங் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும் காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சிதறித்திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை. ஆகையால், மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள் " (எசே. 34:1,8).

## ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு ஆண்டவர்

பூலோகத்தாராலே நம்பப்படுகிற
ஏராளமான கடவுள்களில் ஒருவரல்ல.
இன்னும்,
ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற
குறிப்பிடத்தக்க மகான்களில் ஒருவருமல்ல.
மாறாக,
இப்பாழுலகைப் பாவத்தின் பிடியிலிருந்து
மீட்கும்படியாக வந்துதித்த உலக இரட்சகர்



6 மாதங்களுக்கு
முன் துவங்கப்பட்ட
கொல்லுமாங்குடி
(மயிலாடுதுறை)
சபையில் கூடி வரும்
விசுவாசிகள்.

நாமக்கல் மாவட்டம்
மோகனூரில்
சமீபத்தில் கர்த்தருக்குக்
கீழ்ப்படிந்த இரண்டு
இளம் கிறிஸ்தவர்களுடன்
ஊழியர் சகோ. நீலமேகம்.



**World Evangelism**
**Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m.
(TAMILNADU Contact Mobile: 9244214421)

## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)

Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014

## எங்களது இதர வெளியீடுகள்




சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.